156—

சத்துணவு

***107211—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் புதியதாக துவக்கப்பட்ட அனைவருக்கும் கல்வித் திட்ட பள்ளிகளில் சத்துணவுத் திட்டம் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில், அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் 2001-2002 முதல் 2007-2008 ஆம் கல்வி ஆண்டு வரை, 120 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. இவற்றில் 34 தொடக்கப் பள்ளிகளுக்கு சத்துணவு மையம் புதியதாக ஏற்படுத்தக் கருத்துரு பெறப்பட்டு, அதன் அடிப்படையில் புதிய சத்துணவு மையம் தொடங்கப்பட்டு இப்போது மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல, மீதமுள்ள 86 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கும், அப்பள்ளியின் அருகில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களிலிருந்து மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்த 86 பள்ளிகளுக்கும் புதிய சத்துணவு மையங்கள் துவக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில், 3,168 பள்ளிகளோடு, அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற முறையில், 120 பள்ளிகள் தொடங்கப்பட்டு, அதில் 34 பள்ளிகளுக்கு சத்துணவு மையம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், 86 பள்ளிகளுக்கு இனிவரும்

2010 மே 10]

காலகட்டத்தில், அவை அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதோடு, ஏற்கெனவே இந்த நான்காண்டுக் காலத்தில், 200 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும், அதில் நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற 20 பள்ளிகளையும் இணைத்து, ஒட்டுமொத்தமாக 106 பள்ளிகளுக்கு சத்துணவு மையங்களைத் துவக்கவேண்டுமென்றும், அந்தச் சத்துணவு மையங்களில் சத்துணவு அமைப்பாளர்கள் 106 பேரையும், சமையலர்கள் 212 பேரையும், உதவியாளர்கள் 212 பேரும், நியமித்திட அனுமதி தரவேண்டுமென்ற கோரிக்கையோடு, என்னுடைய குடியாத்தம் தொகுதியில், வெள்ளெரி, ப.உ.ச. பட்டி, பக்கிரிப்பள்ளி, பங்கரிஷிக்குப்பம், தட்டப்பாறை போன்ற பகுதிகள் உட்பட, சத்துணவு மையங்கள் இல்லாமல் பள்ளிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. வேலூர் மாவட்டத்தில் 106 மையங்களிலும் சத்துணவு மையங்களைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையம், அதாவது பள்ளி சத்துணவு மையம் தொடங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளியைத் தரம் உயர்த்தினாலும் சரி, புதியதாக தொடங்கினாலும் சரி, உடனடியாக சத்துணவு மையங்கள் தொடங்கப்பட்டு, அரசிடம் பின்னேற்பு வாங்கலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்த 106 பள்ளிகளிலும் நிச்சயமாக இந்த ஆண்டிலே புதிய சத்துணவு மையங்கள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

முற்பகல் 10-10

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கைக்கு

ஏற்றவாறு அந்த உணவுப் பொருட்களின் ஒதுக்கீடு என்பது அளிக்கப்படுகிறதா? அதேநேரத்தில் அந்தச் சத்துணவு மையங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற சத்துணவு ஊழியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்களா? அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா? அரசு ஊழியர்களைப்போல G.P.F. விதிமுறைகளை அரசுக் கொண்டுவருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சத்துணவு மையம் ஆரம்பிக்கப்படுமா என்று மூலக் கேள்வி கேட்டுவிட்டு, சத்துணவு ஊழியர்களின் பணி குறித்து துணை வினா கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். துணைக் கேள்வி வேறு எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகக் கேட்டீர்களேயானால், அனுமதி கொடுப்பேன். (குறுக்கீடு)

திருமதி ஜி. லதா: பேரவைத் தலைவர் அவர்களே, அதன் தொடர்ச்சியாக, ஊழியர்கள் சம்பந்தமாக அதில் வருவதனால் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல், துணைக் கேள்வி கேட்கக் கூடாது. (குறுக்கீடு) மூலக் கேள்விக்குச் சம்பந்தமாக, சத்துணவு மையம் குறித்து கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி ஜி. லதா: சத்துணவு மையத்தில் பொருட்கள் ஒதுக்கீடு செய்வது இன்றைய விலைவாசி உயர்விற்கு ஏற்றாற்போல் இரண்டு ரூபாய் அதிகரித்துத் தருவார்களா என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு உணவுப் பொருட்கள் எப்படி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று கேட்டார்கள். பள்ளிகளில் உள்ள சத்துணவு சாப்பிடக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசு அரிசியாக இருந்தாலும், பருப்பாக இருந்தாலும், ஒதுக்கீடு செய்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுபோல சத்துணவு ஊழியர்களுக்குப் பொது வருங்கால வைப்பு நிதி என்பது அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கான அரசாணை

2010 மே 10]

பிறப்பிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது. அதுபோல ஓய்வூதியம் என்பது குறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கிய ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற உத்தரவிற்கேற்ப அனைவரும் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல இதுவரை இந்தச் சத்துணவுத் திட்டங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் உத்தவிட்டுள்ளார்கள். அனைவருக்கும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல நிதி உதவி உயர்த்தப்படுமா என்று கேட்டார்கள். அதையும் அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

157—

விடுதி

***70194—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ஆதி திராவிட மகளிர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ஆதி திராவிடர் மகளிர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைவாசல் தொகுதியில் வட சென்னிமலை